2019 செப்டம்பர் மாதம் 12 ஆம் தேதி வியாழக்கிழமை

***தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பெரம்பலூர்***

***எம்.சி.ஓ.பி .நெ. : 790 / 2015***

*2019—ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 12—ஆம் தேதி வியாழக்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாகிய வது நபரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி. V. சசிகலா, கிரேடு 2 பென்ஞ்ச் கிளார்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.*

| | | |
|---|---|---|
| **பெயர்** | : | RW 1, ராஜேந்திரன் |
| **தகப்பனார் பெயர்** | : | பெத்தன் |
| **ஊர்** | : | ஆர்எம்எஸ் காலனி, கருமண்டபம், திருச்சி |
| **வட்டம்** | : | திருச்சி |
| **மாவட்டம்** | : | திருச்சி |
| **தொழில்** | : | சப்இன்ஸ்பெக்டர் ஆப் போலீஸ் |
| **வயது** | : | 57 |

*தேதி: 12.09.2019.*

**முதல் விசாரணை:—**

நான் தற்போது திருச்சி தெற்கு போக்குவரத்து புலனாய்வுப்பிரிவில் ஆய்வாளராக பணிபுரிகின்றேன். நான் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். சம்மனில் கண்ட ஆவணங்களை எடுத்து வந்துள்ளேன். புகாரை ராஜ்குமார் என்பவர் கொடுத்துள்ளார். விபத்து சம்பவம் நடந்த நாள் 4.7.2014 ஆகும். டிஎன் 45 எ எச் 3889 என்ற வாகனத்தில் ராஜ்குமார் மற்றும் தேவநாத், தீபக் ஆகியோர்கள் பயணம் செய்தார்கள். வண்டியை ஓட்டியவர் ராஜ்குமார் ஆவார். சம்பவம் நடந்த இடம் திருச்சி பொன்மலைப்பட்டி, ஜெயில்வார்டன் குடியிருக்கும் இடமாகும். எதிரி வந்த வாகனம் டிஎன் 45 டி இ 1161 என்ற ஹோண்டா சைன் ஆகும். எதிரியின் பெயர் ஜனார்தனன் அவர் தான் வண்டியை ஓட்டி வந்தார். எதிரி வந்த வாகனத்தில் மூன்று பேர் பயணம் செய்தார்கள். குற்றப்பத்திரிக்கை எதிரி ஜனார்தனன் பெயரில் போடப்பட்டது. எதிரியை 9.8.2014 அன்று காலை 10.00 மணிக்கு கைது செய்யப்பட்டது. எதிரியை ஜெயராஜ் த/பெ. ஜெபாஸ்டின் என்பவர் முன்னிலையில் கைது செய்யப்பட்டார். விபத்து நடந்த நாள் முதல் கைது செய்யப்பட்ட நாள் வரை எதிரி எங்களிடத்தில் எந்த புகாரும் கொடுக்கவில்லை. சம்பவம் நடந்த ரோடு கிழக்கு மேற்கு ரோடாகும். அந்த சாலையின் அகலம் மொத்தம் 20 அடியாகும். மேற்படி புகார்தாரர் மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி

வந்தார். எதிரி கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி வந்தார். விபத்து நடந்த இடம் ரோட்டின் வடக்கு புறத்தில் இருந்து 6 அடி தள்ளி நடைபெற்றது. எதிரி ஓட்டி வந்த வாகனத்தினால் தான் விபத்து ஏற்பட்டது. என்னுடைய விசாரணையிலும் சாடசிகளின் விசாரணை அடிப்படையிலும் எதிரியால்தான் விபத்து ஏற்பட்டது என்று குற்றப்த்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குற்ற எண் 184 / 2014 என்ற வழக்கின் சம்பவ வரைபடத்தின் உண்மை நகலை தாக்கல் செய்கின்றேன் அது **எ.சா.ஆ.1.**

குற்ற அறிக்கை **எ.சா.ஆ.2.**

பார்வைமகஜர் **எ.சா.ஆ.3.**

**குறுக்கு விசாரணை:– (மனுதாரர் தரப்பில் )**

இந்த வழக்கில் நான் விசாரணை அதிகாரி அல்ல. இந்த வழக்கின் கோப்புகளின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கின்றேன். எ.சா.ஆ.1 முதல் 3 வரை உள்ள ஆவணங்களின்படி தான் சம்பவம் நடைபெற்றது என்று என்னால் உறுதியாக கூறமுடியாது. எதிரி ஜனார்தனன் ஓட்டி வந்த வாகனத்தில் மூன்று பேர் வந்தார்கள். அவர்கள் யார் யார் என்று முதல் தகவல் அறிக்கையில் சொல்லவில்லை. நான் தாக்கல் செய்த எ.சா.ஆ.2 குற்றப்பத்திரிக்கையிலும், எதிரி கூட வந்த நபரிகளின் பெயர்கள் குறிப்பிடவில்லை. நான் விசாரித்த சாட்சிகளிடத்திலும், எதிரி கூட வந்த நபர்களைப்பற்றி கூறவில்லை. எதிரி ஓட்டி வந்த வாகனத்தில் சசிகுமார் என்பவர் மட்டும் தான் வந்தார் என்றும், காயம்பட்டவர்களுக்கு ஆதரவாக எதிரியுடன் மூன்று பேர்கள் வந்ததாக முதல் தகவல் அறிக்கை பதியப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. ராஜ்குமார் என்பவர் தான் என்னிடம் புகார் கொடுத்தார். தீபக் என்பவர் டிஎன் 45 எ எச் 3889 என்ற வாகனத்தை ஓட்டினார். எங்களது சாட்சி பட்டியலில் தீபக் என்பவரை 3 வதாக குறிப்பிடப்பட்டுள்ளது. தீபக் என்பவர் சம்பவம் நடந்ததை பற்றியும், அவருக்கு ஏற்பட்ட காயத்தை பற்றியும் சொல்லியுள்ளார். சம்பவ இடத்திலேயே தீபக்கை விசாரித்து வாக்குமூலம் பதிந்து கொண்டேன். குற்றம் சாட்டப்பட்டதாக சொல்லப்படும் ஜனார்த்தனன் என்பவரிடத்தில்

மருத்துவமனைக்கு சென்று வாக்குமூலம் எதுவும் பெறப்படவில்லை. எதிரி ஜனார்தனிடம் இருந்து முறையாக வாக்குமூலம் வாங்கியிருந்தால் உண்மை சம்பவம் பற்றி தெரிந்திருக்கும் என்றும், அவ்வாறு செய்யாமல் விபத்தில் காயம் அடைந்தவருக்கு சாதகமாக முதல் தகவல் அறிக்கை பதியப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. இந்த விபத்தில் காயம் அடைந்த தீபக் என்பவரை 4.7.2014 அன்று திருச்சி அரசு தலைமை மருத்துவமனையில் முதலில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டார். 5.7.2014 ஆம் தேதியன்று ஏபிசி மருத்துவமனையில் அவர் உள்நோயாளியாக இருந்த போது விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. 10.09.2014 அன்று குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டது. எ.சா.ஆ.1 மாதிரி வரைபடத்தில் அடிபட்டவர்கள் மற்றும் அவர்களுடைய வாகனங்கள் எந்த இடத்தில் இருந்தது என்பதை பற்றி குறிப்புகள் இல்லை என்றால் சரிதான். வரைபடத்தில் எதிரி ஓட்டி வந்த வாகனம் தவறான பாதையில் வந்து மோதியதாக வரைபடத்தில் குறிப்பு இல்லை. சம்பவம் நடந்த ரோட்டை இரண்டாக பிரிப்பதற்கு நடுவில் கட்டை எதுவும் இல்லை. வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளவாறு சம்பவம் நடைபெறவில்லை என்றும், சம்பவ இடத்திற்கு சென்று ஆய்வு செய்யவில்லை என்றும், காவல் நிலையத்தில் வைத்து வரைபடம் தயார் செய்யப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. சம்பவ இடத்திற்கு சென்று வரைபடம் வரைந்திருந்தால் வாகனங்கள் எங்கு இருந்தது என்பது பற்றி குறிப்பிட்டு சொல்லப்பட்டிருக்கும் என்றும், அவ்வாறு சம்பவ இடத்திற்கு செல்லாததால் தான் வரைபடத்தில் வாகனங்கள் பற்றியும், காயம் அடைந்தவர்களைப்பற்றியும் சொல்லாமல் விடப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. புகார் கொடுத்த ராஜ்குமாருக்கு காயங்கள் எதுவும் இல்லை. காயம்பட்டவர்களிடம் புகார் பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்திருந்தால் உண்மை நிலை தெரிந்திருக்கும் என்றால் சரியல்ல. ஜனார்தனன் என்பவரை காவல் நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டது. ஜனார்தனன் அடிபட்டவுடன் மருத்துவமனைக்கு சென்று விட்டார் என்றும், அதன் பின்னிட்டு காவல் நிலையத்திற்கு விபத்து சம்மந்தமாக புகார் கொடுக்க வந்த போது எதிரி ஜனார்தனனை கைது செய்து

விட்டீர்கள் என்று சொன்னால் சரியல்ல. தீபக் என்பவருக்கு அடிபட்டவுடன் அவர் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார். வழக்கில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்த பிறகு தீபக் என்பவரை பற்றி எங்களுக்கு தெரியாது. தற்பொழுது இந்த விபத்து சம்மந்தமாக வழக்கு திருச்சி, குற்றவியல் நீதிமன்றத்தில் எஸ்டிசி நெம்பர் 370 / 2015 என்ற வழக்கு நிலுவையில் உள்ளது. முறையாக விபத்து சம்மந்தமாக விசாரிக்காமல் தீபக் என்பவருக்கு அதிகப்படியான காயங்கள் ஏற்பட்டதால் அவருக்கு உதவும் நோக்குடன் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தீபக் என்பவர் அடிபட்டவுடன் வாக்குமூலம் கொடுக்க முடியாத நிலையில் இருந்தார் என்றும், நாங்கள் அவரிடத்தில் வாக்குமூலம் பெற்றதாக சொல்வது பொய் என்றும் சொன்னால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை:– (2–ம் எதிர்மனுதாரர் தரப்பில் )**

குற்ற வழக்கில் விபத்தில் சம்மந்தப்பட்ட,காயம்பட்ட நபர்கள் அனைவரையும் விசாரணை செய்து தான் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கில் ஜனார்தனன்கிரிடி என்பவருடன் பயணம் செய்த சசிகுமார் என்பவரையும் விசாரணை செய்துள்ளோம். ஜனார்தனன் கிரிடியின் வாகனத்தின் பின்னால் அமர்ந்த சசிகுமார் என்பவர் தனது வாகனத்தில் ஜனார்தனன்கிரிடி வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டினார் என்று சொல்லியுள்ளார். மேற்படி சாட்சியத்தின்படி ஜனார்தனன்கிரிடி மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மறு விசாரணை:– இல்லை.**

**ஒம்/–எஸ்.கிரி,**
**தலைமைக் குற்றவியல் நீதித்துறை நடுவர்,**
**பெரம்பலூர்.**